செ.வெ.எண்.33 நாள்.19.01.2018.

# பத்திரிக்கை செய்தி

## மாவட்ட அளவிலான தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாம்

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறவன மேம்பாட்டு திட்டம் (NEEDS), மற்றும் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) போன்ற சுயவேலை வாய்ப்பு உருவாக்கும்-அரசு மானியத்துடன் கூடிய கடனுதவி திட்டங்கள், தமிழ்நாடு அரசு தொழில் வணிகத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி மூலம் நமது மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தொழில் முனைதலில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் முனைதலின் சிறப்பு, தொழிலை தேர்ந்தெடுப்பது எப்படி?, திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் வங்கி கடன் பெறும் வழிமுறைகள் போன்றவை குறித்து விரிவாக தெரிந்து கொள்ளும் வகையில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில், நிபுணர்கள் விரிவுரையுடன், விழிப்புணர்வு முகாம் நடைபெறவுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரைகளின் படி இம்முகாம் 24.01.2018 புதன்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு அண்ணாபல்கலைக்கழகம், திருநெல்வேலி மண்டல வளாகம், திருநெல்வேலியில் நடைபெறுகிறது. இம் முகாம் சென்னை, தொழில் முனைவோர் மேம்பாட்டு மற்றும் புத்தாக்க நிறுவனம் மற்றும் திருநெல்வேலி மாவட்ட தொழில் மையத்தால் நடத்தப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள, தொழில் முனைதலில் ஆர்வமுள்ளவர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு தொழில் முனைதலில் விவரம் அறிந்து, சுயதொழில் தொடங்கி பயனடையுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி மாவட்டம்.